**55. அருந்ததி ஆறு கடந்த கதை**

கங்கையாற்றிற்குத் தென்கரையில் வசிட்ட முனிவர் அருந்ததியோடு தங்கியிருந்தார். ஒருநாள் சாப்பிட்டுக் கொண்டிருந்த வசிட்டர் அருந்ததியைப்பார்த்துப், ''பெண்ணே! விசுவாமித்திரர் பசியோடு



வடகரையில் இருக்கிறார். அவருக்குச் சாப்பாடு கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வா” என்று கூறினார். அருந்ததி வசிட்டரைப் பார்த்துக், "கங்கையில் நீர் மிகுதியாகச்செல்லுகிறதே எவ்வாறு செல்வது? என்று கேட்டாள். வசிட்டர் அருந்ததியைப் பார்த்து, ''என்றுந் துறவியாகஇருப்பவர் (நித்திய சந்நியாசி) வழிவிடச் சொன்னார்" என்று சொல்லிக் கங்கையை வழிவிடுமாறு கேள்வழிவிடும்போ” என்று சொன்னார். அவ்வாறே அருந்ததி உணவை யெடுத்துக்கொண்டு கங்கைக் கரைக்குச்சென்றாள் கங்கைத் துறையில் நின்றுகொண்டு, "என்றுந் துறவியாக இருக்கும் என்னுடைய கணவர் வழிவிடச்சொன்னார் வழி விடு" என்று சொன்னாள். கங்கையும் உடனே வழிவிட் டாள். அருந்ததி விசுவாமித்திரரிடஞ்சென்று உணவு படைத் தாள். அவருஞ் சாப்பிட்டு முடித்தார். அருந்ததி திரும்பிவரத் தொடங்கியபொழுது, விசுவாமித்திரரைப் பார்த்து, "கங்கையில் நீர் மிகுதியாகச்செல்லுகிறதே நான் அக்கரை சேர்வதெப்படி? என்று கேட்டாள். விசுவாமித்திரர், "தாயே! நீ வருகிற பொழுதுஎவ்வாறு வந்தாய்?" என்று கேட்டார். அருந்ததி விசுவாமித்திரரைப் பார்த்து, எம் கணவர், "நித்திய சந்நியாசிவழிவிடச் சொன்னார் என்று சொல் கங்கை வழிவிடும்" என்றார். அவ்வாறே சொன்னேன், வழி விட்டது; வந்தேன்" என்று சொன்னாள். விசுவாமித்திரர், "ஆனால், இப்பொழுது என்றும் பட்டி னியாகக் கிடப்பவர்(நித்திய உபவாசியார்) வழிவிடச் சொன்னார், கங்கையே வழிவிடு என்று சொல் வழிவிடும் போ" என்றுசொன்னார். அருந்ததியும் கங்கைக் கரையில் வந்து, "என்றும் பட்டினியாகக் கிடப்பவர் வழிவிடச் சொன்னார். கங்கையே வழி விடு" என்று சொன்னாள். கங்கையும் வழிவிட்டது. அருந்ததி வசிட்டரிடத்தில் வந்து, " தேவரீர் அடியாளை விட்டுப் பிரியாமலிருக்கிறீர் அவ்வாறாகத் தாங்கள் என்றுந் துறவியாக இருப்பது எப்படி? விசுவாமித்திரருக்கு இப்பொழுதுதான் சாப்பாடு போட்டேன். அவருஞ் சாப்பிட்டார். அவ்வாறாக அவர் என்றும் சாப்பிடாமலிருப்பதாகச் சொல்வது எப்படி? உண்மையான மொழிகளுக்கல்லவா கங்கை வழிவிட வேண்டும் ?” என்று கேட்டாள். . வசிட்டர் அருந்ததியைப் பார்த்து, இந்தப் புரட்டு மொழிகளுக்காகக் கங்கைவழிவிடவில்லை. கங்கையே வழி விடு என்று உன்னுடைய வாக்கினாலே சொன்னதற்காகக் கங்கைவழிவிட்டாள். கற்புடைய மாதர்கள் வாக்குப் பலிதமாகும். பத்தினி வாக்கை யாரும் மதிப்பர் சொன்னார். என்றுநித்தியசந் நியாசிஎன்றும் நித்யஉப வாசியென்றும் ரிஷிகள் கூற அத்தைமெய்யென் றருந்ததியார் கங்கை தனக்குரைத்து வழி

அன்பாய்க் கேட்கச் சித்தமகிழ்ந் தருந்ததிசொல் தனக்குவழி கங்கைவிட்டாள் செயங்கொண்டாரே.

[கற்புடைமை]

(செயங்கொண்டார் வழக்கம்)